# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 13,615—1963 අප්‍රේල් 26 වැනි සිකුරාදා—1963.4.26

13,615 ம் இலக்கம்—1963 ம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 26 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வோரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேருகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் . | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும்.. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் . | — |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மானுமிகளுக்கு அறிவித்தல்கள் ... .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 233 | " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

### 1958 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நெற்காணிச் சட்டம்

இத்தாற் பொது மக்களுக்கு அறிவிப்பதாவது கௌரவ காணி, விவசாய, நீர்ப்பாசன, மின்சார அமைச்சர் கீழ்ச் சொல்லப்பட்டவரை 1958 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நெற்காணிச் சட்டத்தின் பிரிவு 59 (1) இன் ஏற்பாடுகளின் படியும், அதன்கீழ் அமைக்கப்பட்ட பிரமாணங்களின் படியும் ஸ்தாபிக்கப்பட்ட புனராலோசனைச் சபையில் 1.5.63 தொடக்கம் ஒரு வருட காலத்திற்கு அங்கத்தவராக இருந்து அச்சபைக்கு மேற்படி சட்டத்தின்கீழ் செய்யப்படும் அப்பீல்களை விசாரிக்கவும், தீர்மானிக்கவும் நியமித்துள்ளார்.

திரு. வி. எஸ். குணவர்தன

எம். சிறீகாந்தா,
நிரந்தரக் காரியதரிசிக்காக.

காணி, விவசாய, நீர்ப்பாசன, மின்சார அமைச்சு,
கொழும்பு 1,

1963 ம் ஞு ஏப்ரல் மீ 19 ந் உ.

### கட்டற்றெழிற் கட்டளைச் சட்டம் (212 ம் அத்தியாயம்)

பிரிவு 20 (9) இன்கீழ் அறிக்கை

புத்தள மாவட்டத்தில் சின்னப்பாடு, கண்டத்தொடுவாவ என வழங்கும் மீன்பிடி நிலையங்களில் கரைவலை உபயோகித்து மீன்பிடிப்பவர்களுக்கும் தெப்பத்தை உபயோகித்து மீன்பிடிப்பவர்களுக்குமிடையே, சின்னப் பாடு, கண்டத்தொடுவாவ எனும் மீன்பிடி நிலயங்களையணைந்துள்ள நீரகத்தில் அவரவர்களுக்குரிய மீன்பிடி உரிமைகளையிட்டு எழுந்துள்ள தகராற்றினை, விசாரணை செய்வதற்காக நியமித்த மத்தியட்சரின் அறிக்கை பொதுமக்களின் தகவலுக்காக இத்தால் பிரசுரிக்கப்படுகின்றது.

2. இம்மீன்பிடித் தகராற்றினுல் பாதிக்கப்படுகின்ற எவரேனும் அல்லது இத்தகராற்றுடன் சம்பந்தப்பட்ட அல்லது இத்தகராற்றினுல் சம்பவிக்கக்கூடிய எந்த விடயத்தையிட்டும் அல்லது இவ்வறிக்கையில் வழங்கியுள்ள எந்த விடயத்தையிட்டும் முறையீட்டாட்சேபனை தெரிவிக்க விரும்புவோரெவரேனும், அதை இவ்வறிவித்தல் பிரசுரித்த தினத்தி லிருந்து ஒரு மாதம் முடிவடையு முன்னர், விவசாயம், காணி, நீர்ப்பா சன, மின்சக்தி அமைச்சர் அவர்களுக்கு எழுத்துமூலம் அறிவிக்க வேண்டும்.

எச். ஈ. தென்னக்கோன்,
நிரந்தரச் செயலாளர்,
விவசாய, காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சு.

கொழும்பு,
1963 ம் ஞு ஏப்ரல் மீ 19 ந் உ.

4—729/1

### முக்கிய விளம்பரம்

*1963 ஆம் ஆண்டு வைகாசி (மே) மாதம் 7 ந் திகதி செவ்வாய்க்கிழமையும் 8 ந் திகதி புதன்கிழமையும் அரசாங்க விடுமுறைகளாக இருப்பதால் 1963 ம் ஆண்டு வைகாசி (மே) மாதம் 10 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1963 ம் ஆண்டு வைகாசி (மே) மாதம் 3 ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

பேர்னுட் த சில்வா,
*அரசாங்க அச்சகத் தலைவர்.*

*அரசாங்க அச்சகம்,*
*கொழும்பு,*
*1963 ம் ஞு சித்திரை (ஏப்பிறில்) மீ 26 ந் உ.*

## சின்னப்பாடு மீன்பிடித் தகராறு

இத்தகராறு விவசாயம், காணி, நீர்ப்பாசனம், மின்விசைக் கௌரவ அமைச்சரவர்களின் 1961 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 31 ம் திகதியிட்ட கடிதத்தினுல் விசாரணைக்காக எனக்கு ஒப்புவிக்கப்பட்டது. அதன் அடக்கம் பின்வருமாறு :—

கடற்றெழிற் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 212) பிரிவு 20 (1) இன் சாராம்சப்படி, புத்தள மாவட்டத்தில் சின்னப்பாடு, கண்டத்தொடு வாவ என வழங்கும் மீன்பிடி நிலையங்களிலமைந்துள்ள ஒன்று முதல் இருபத்து மூன்று வரையுமுள்ள பாடுகளில் கரைவலையை உபயோகித்து மீன்பிடிக்கின்றவர்களுக்கிடையிலும் சின்னப்பாடு, கண்டத்தொடுவாவ எனும் மீன்பிடி நிலையங்களை அணைந்துள்ள நீரகத்தில் மீன்பிடிக்கும் தெப்ப மீன்பிடிகாரர்களுக்கு மிடையில் இந்த நீரகத்தில் அவரவர் களுக்குரிய மீன்பிடி உரிமைகளையிட்டு எழுந்துள்ள ஒரு தகராற்றினை யான் தங்களிடம் ஒப்புவிக்கின்றேன்.

2. இத்தகராற்று விடயம் பின்வருமாறு :—

கரைவலை மீன்பிடியாளர்கள் தங்கள் பாடுகளை அணைந்துள்ள நீரகம், சரித்திரத்திற்கப்பாற்பட்ட காலம் தொட்டு கரைவலை மீன்பிடிக்காக மாத்திரம் புறநீங்கலாகப் பாவிக்கப்பட்டு வந்ததென உரிமை கோரு கின்றனர். இந்த நீரகத்தில் தெப்பத்தால் மீன்பிடித்தல் தங்கள் மீன்பிடியை எதிரிடையாய்ப் பாதிக்கின்றதெனக் குற்றம்சாற்றி, கரை வலை மீன்பிடிக் காலத்தில் தெப்ப மீன்பிடியை முற்றும் விலக்கி வைக்கவேண்டுமென வேண்டுகின்றனர்.

தெப்ப மீன்பிடியாளர்கள், இந்த நீரகத்தில் நீண்டகாலமாய் இவ்வித மீன்பிடியைச் செய்து வருகின்றனரென்றும், இந்த நீரகத்தில் தங் களுடைய மீன்பிடிச் செயலாற்றல்கள், கரைவலை மீன்பிடியாளர்களால் தடைப்படுகின்ற தென்றும் கூறுகின்றனர். தங்கள் மீன்பிடிச் செய லாற்றல்களை எவ்வித தடையோ பங்கமோ இல்லாது செய்துவர அனு மதிக்கப்பட வேண்டுமென அவர்கள் வேண்டுகின்றனர்.

3. இத்தகராற்றையிட்டு ஒரு பகிரங்க விசாரணையை நடாத்துமாறும் இதன் விடய அடக்கத்தையிட்டு மாத்திரமல்லாது இப்பிரிவின் நியதி களுக்கமைய செய்யப்படும் மகஜர்கள் ஏதாவதிலாகுதல் குறிப்பிடக்கூடிய தான இத்தகராற்றிலிருந்தும் எழும் எல்லா விடயங்களையுமிட்டும் அறிக்கை சமர்ப்பிக்குமாறு தங்களை யான் கேட்டுக்கொள்கிறேன்.

இங்ஙனம்,
தங்கள் பணிவுள்ள ஊழியன்,
சி. பி. டீ. சில்வா,
விவசாய, காணி, நீர்ப்பாசன, மின்விசை அமைச்சர்.

என்னுல் நடாத்தப்படவிருந்த பகிரங்க விசாரணையைப் பகிரங்கப்படுத்து வதற்காக, கடற்றெழிற் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 212) இன் பிரிவு 20 இல் சுட்டிக்காட்டியுள்ள நடைமுறையைக் கையாண்டு, 1962 ம் ஆண்டு நவம்பர் மாதம் 7 ம், 8 ம், 9 ம், 21 ம் திகதிகளில் வத்துளு வைச் சுற்றுப் பயண வங்களாவில் ஒரு பகிரங்க விசாரணை என்னுல் நடாத்தப்பட்டது. இத்தகராற்றில் அக்கறை கொண்ட கட்சியினர்களின் சார்பாகக் கூறிய எல்லாச் சாட்சியங்களும் அவர்கள் சார்பில் அவர் களுடைய சட்டவறிஞர்கள் சமர்ப்பித்தவைகளும் முடிவடைந்த பின்னர் எனது அறிக்கையைத் தயாரிக்கவும் சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப் பட்ட அக்கறை கொண்டுள்ள கட்சியினர்களுக்கு அதனை வாசித்துக் காட்டவும் 1962 ம் ஆண்டு டிசம்பர் 19 ம் திகதிக்கு நடவடிக்கைகளை யான் ஒத்திவைத்தேன்.

கடற்றெழில் அதிபரவர்களுக்குச் செய்யப்பட்ட எழுத்துமூலமான மக ஜர்கள் கரைவலைச் சொந்தக்காரர்களின் சார்பில் மூன்றும், தெப்பச் சொந்தக்காரர்களின் சார்பில், ஒன்றும், விசாரணைக்கு முன்னர் கடற் றெழில் அதிபரால் அனுப்பிவைக்கப்பட்டிருந்தன. கரைவலைக்காரர்கள், மீன்பிடிக்காலம் மீன்பிடியில்லாத காலம் ஆகிய இரண்டிலும் தெப்ப மீன்பிடியை முற்றும் விலக்கி வைக்க வேண்டுமெனக் கேட்டிருந் தனர். வழக்குரைஞர் திரு. கே. சி. டி சில்வா, பெருக்குதோர் ஜனுப். எஸ். எம். காஸீம் அவர்களின் அனுசரணையோடு கரைவலை மீன்பிடிகாரர்களுக்கும் பெருக்குதோர் ஜனுப். எஸ். எம். அபுத்தாஹிர் தெப்ப மீன்பிடிகாரர்களுக்குமாகத் தெரிபட்டனர்.

சாட்சியமளிப்பதற்கு அழைக்கப்பட்ட பிரதான சாட்சிக்காரர்கள் யாவ ரும் இதிலக்கறையுள்ள கணிப்புள்ள ஒரு தொகையினரும் சமூகமளித் தனர்.

உதவி அதிபர் திரு. வி. எல். சி. பீற்றர்ஸ் அவர்களும் கடற்றெழிற் பகுதியிலுள்ள மற்றும் உத்தியோகத்தர்களும் சமூகமளித்தனர்.

### தகராறு

இத்தகராறு எழுந்துள்ள பிராந்தியம் புத்தள மாவட்டத்தில், பொது வாக சின்னப்பாடு என அழைக்கப்படுவதும், சரியான சின்னப்பாடுவை யும் கண்டத்தொடுவாவையும் அடக்கும். இது, தெற்கில் உடப்புக்கும் வடக்கில் மூக்குத்தொடுவாவைக்கும் அணைந்தாயுள்ளது.

இந்தக் கடற்கரைப்பாகம் ஒவ்வொன்றும் கிட்டத்தட்ட 450 யார் அகலமான " பாடு "களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. 1 ம் இலக்கப் பாடுக்கும் (உடப்புக்குச் சிறிது வடக்கிலுள்ளது) 23 ம் இலக்கப் பாடுக்கும் இடையிலடங்கிய துண்டுக் கடற்கரையையிட்டே இவ்விசாரணை சம்பந்தப் பட்டுள்ளது.

ஒவ்வொரு பாடுக்கும், கரைவலைச் சொந்தக்காரரின் பேரில் உத்தர வாணையளிக்கப்பட்டிருக்கின்றது. அவர்கள் அந்தப் பாடுகளில் கரை வலை போடுவார்கள். 11 ம் இலக்கப் பாடு, முடிக்குரிய ஒதுக்கிடமான படியால் உத்தரவாணையளிக்கப்படவில்லை. இதற்கும் ஒரு வருடம் உத்தர வாணையளிக்கப்பட்டிருந்தது. ஆனுல் இந்தப்பாடு புதுப்பிக்கப்படவில்லை.

கரைவலைகள் ஒவ்வொன்றிலும் மடிவலை யெனும் நடுவலையும் அதன் ஒவ்வொரு பக்கத்தோடும் இணைக்கப்பட்டுள்ள கைவலைகளும் சூழலுக்கேற்றவாறு எத்தனை வேண்டுமோ அத்தனை-கடைசிக் கைவலை ஒவ்வொன்றுக்கும், அந்தக் கரையினுள்ள கம்பான் கயிறு ஒன்றும் இணைக்கப்பட்டுமிருக்கின்றது. வலைக்கூட்டம் பருமனில் பெரியதும் கடலில் முற்றுய்ப் போட்டால் கரையிலிருந்து கிட்டத்தட்ட இரு மைல் நீளம் வரையுமிருக்குமெனவும் சாட்சியமிருந்தது. கரையிலுள்ள கூட் டத்தினர் இரு அந்தங்களிலுமுள்ள கம்பானைப் பிடித்து வலையைக் கரைக்கு இழுத்து ஆங்கு மீனைக்கரையேற்றுவர். ஒவ்வொரு கரைவலைக் கும் வலையையும் கம்பானையும் கடலுக்குக் கொண்டு போவதற்கு " பார் " எனும் தட்டையான கலப்பத்தையுடைய பெரும் குல்லாத் தோணிகள் நான்கு அல்லது ஐந்தும் அதனைச் செயற்படுத்துவதற்கு மொத்தம் 40 முதல் 60 பேர் ஆட்களும் தேவை. பார்களையும் சேர்த்து ஒரு கூட்டம் கரைவலை அணியடுக்கின் விலை ஏறக்குறைய ரூபா 35,000 எனக் கொடுப்பட்டிருக்கின்றது.

" தெப்பங்கள் " சிறிய, ஏறக்குறைய தட்டையான மூன்று அல்லது நான்கு கட்டைகளை ஒன்றாக இணைத்துக் கட்டியுள்ளதும் ஒருவர் அல்லது இருவரை ஏற்றிச் செல்லக்கூடியதுமான கலமாகும். வழிவலையென அழைக்கப்படும் பல அளவான பருமனையுடைய வலைகளை அவைகள் ஏற்றிச் சென்று கடலில் போட்டு, பின்னர் வலைகளில் மீன்பட்டதும் இழுத்தெடுப்பர். இதன் விலை, சொற்பமானதும் சொந்தக்காரனே செலுத் துபவனுமாக இருப்பதாலும் முக்கியமாக இது செயற்படுத்துவோனின் சிறு கலமொன்றுயிருக்கின்றது.

கரைவலைக்காரர்கள் அக்டோபர் மாதம் தொடக்கம் அடுத்துவரும் மார்ச்சு அல்லது ஏப்ரில் வரையுமுள்ள மீன்பிடிக்காலத்தில் மாத்திரம், அதாவது, வடகீழ்ப் பருவப் பெயர்ச்சிக் காற்றுக் காலத்தில், சின்னப் பாட்டுப் பிராந்தியத்தில் மிகவும் சுறுசுறுப்பாய்த் தொழில் செய்வர். கடல், இக்காலத்தில் அமைதியாயிருக்கும். இவ்விதமிருத்தல் அவர் களின் தொழிலுக்கு அவசியமாகும். மீன்பிடியற்ற காலமான ஏப்ரில் மாதம் தொடக்கம் செப்டம்பர் மாதம் வரை, அதாவது, தென் மேற் பருவப்பெயர்ச்சிக் காற்றுக் காலத்தில் கடல் இப்போது அமைதியாயிருக் கின்ற திழ் கரைக்குப் புலம் பெயர்ந்துசென்று ஆங்கு மீன்பிடியைச் செய்து பருவப் பெயர்ச்சிக் காற்று மாறியதும் திரும்பவும் மேற்குக் கரைக்குத் திரும்புவர். மீன்பிடியற்ற காலத்தில் அவர்களின் கருவி களைப் பார்த்துக் கொள்வதற்காக அவர்களின் மேற்குக் கரைப்பாடு களில் பாதுகாவலர்களை அமர்த்திவைப்பர்.

கரைவலைக்காரர்கள், மீன்பிடிக்காலங்களில் காலையில் சுமார் 7 மணியளவில் தங்கள் செயலாற்று வேலையை ஆரம்பிப்பர். வலைகளை எடுத்துக்கொண்டு போதல், வலையைப் போடுதல், இழுத்தெடுத்தல், மீனைக் கரையேற்றுதல் ஆகிய ஒரு முழு சுழலும் அடங்க 2½ மணித்தி யாலம் வரை யெடுக்கின்றது. கடற்கரையை நீங்கிய இடத்தில் மீன் கூட்டங்களைக் கண்டால் தேவைக்கேற்றவாறு திருப்பித் திருப்பி இச் செயலாற்றல் நடைபெறும். அவர்கள் இரவில் வலை போடுவதில்லை.

தெப்ப மீன்பிடியாளர்கள், மறுபுறத்தில் பகல் வேளைகளில் மீன் பிடிப்பதில்லை. அவர்கள் கரையிலிருந்தும் காலை 3 மணியளவில் புறப் பட்டுச் சென்று காலையில் 7 அல்லது 8 மணிக்குக் கரை திரும்புவர் என்ப தாகச் சாட்சியமிருந்தது.

சின்னப்பாடு, கண்டத்தொடுவாவப் பிராந்தியங்களில் 1937 ம் ஆண்டு வரையில், பல்லாண்டுகள் தெப்பங்களேதும் செயலாற்றவில்லையெனத் தெரிகின்றது. அந்த வருடத்தில் தெப்பங்கள் சில செயலாற்றத் தொடங்கின. ஆனுல், இவைகள் செயலாற்றுது விலக்கி வைக்கப்பட்டன. அதிலிருந்து 1953 ம் ஆண்டு வரையும் தெப்பங்களேதும் செயலாற்ற வில்லை.

1953 ம் ஆண்டு பேர்னுந்து எனும் பெயருடைய மாமனுக்கும் மருகனுக்கும் சொந்தமான இரு தெப்பங்கள் இந்தப் பிராந்தியத்தில் செயலாற்றத் தொடங்கின. இந்த இரு மீன்பிடிகாரர்களும் தங்கள் தெப்பங்களை மீன்பிடியற்ற காலத்திலேயே பாவித்தனர். இந்த இரு தெப்பங்களும் தொடர்ந்து உத்தரவாணையெடுத்தும் 1959 ம் ஆண்டு வரையும் மீன்பிடியற்ற காலங்களில் மாத்திரம் செயலாற்றிவந்தன.

1956 ம் ஆண்டில், 10 ம் இலக்கப்பாட்டிலிருந்து 1956 ம் ஆண்டு ஜூன் மாதம் தொடக்கம் தெப்பமீன்பிடி செய்யுமாறு கொட்டாந்தீவுக் கிராம முன்னேற்றச் சங்கத்திற்கு உத்தரவாணையொன்று வழங்கப்பட் டது. மட்டுப்படுத்திய துவா மீன்பிடியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் எதிர்த்தமையால் புத்தள அரசாங்க அதிபரவர்களால், இந்த உத்தர

வாணை 1956 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ம் திகதி தொடக்கம் திருப்பியெடுக்கப்பட்டது. 30.9.56 ஆகிய இத்திகதி, மேற்குக் கரையில் கரைவலை மீன்பிடிக்கால ஆரம்பத்தோடு பொருந்துகின்றது.

1958 ம் ஆண்டு இந்த விடயம் திரும்பவும் ஆராயப்பட்டவிடத்து புத்தள அரசாங்க அதிபர், 1958 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 29 ம் திகதி " இங்கு தெப்ப மீன்பிடியை அனுமதிக்கும் வினை எதுமில்லை " யெனக் குறிப்பெழுதினார்.

1960 ம் ஆண்டு மேலும் நான்கு தெப்பங்களுக்கு உத்தரவாணைகளைக் கொடுத்து எல்லாமாக ஆறு தெப்பங்களாயாக்கப்பட்டன. புதிய தெப்பங்களிலொன்று 1953 ம் ஆண்டு முதல் தெப்ப மீன்பிடிசெய்த " மாமன்-மருகன் " என்பவர்களின் மாமனான டபிள்யூ. அத்தோனி பெர்னாந்துவாலும் ஒன்று, டபிள்யூ. யோசப் பர்னாந்துவாலும் கடைசி, என். ஜீ. ஸ்ரீவன் லிவேராவாலும் உத்தரவாணையெடுக்கப்பட்டன. இந்த ஆறு தெப்பங்களும் 1960 ம் ஆண்டில் மீன்பிடியில்லாத காலங்களில் மாத்திரம் செயலாற்றினவென சின்னப்பாடு உப-பரிசோதகராகவிருந்த ஜனாப். பாத்தா கூறினார்.

1961 ம் ஆண்டு மேலும் ஆறு தெப்பங்கள் பதிவு செய்யப்பட்டு எல்லாமாக 12 தெப்பங்கள், முதன்முறையாக மீன்பிடிக்காலத்தில் செயலாற்றவாரம்பித்தன.

இஃது கரைவலைக்காரர்களின் மும்முரமான எதிர்ப்பைக் கொண்டு வந்தது. சில கைகலப்புகளுமேற்பட்டன.

1961 ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தெப்ப மீன்பிடியாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட மட்டுப்படுத்திய லூது மாதா கூட்டுறவு மீன்பிடி விற்பனைச் சங்கமென அழைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கமொன்று கூடப்பட்டது. இச்சங்கம், இத்தகராற்றின் கட்சியினர்களில் ஒன்றும், தெப்ப மீன்பிடியாளர்களின் பிரதிநிதியுமாகும்.

இத்தகராற்றைச் சேர்ந்த பிராந்தியம் அநேக வருடங்களாக கரைவலை மீன்பிடிக்காக புறநீங்கலாகப் பாவிக்கப்பட்டு வந்ததென்று சாட்சியத்திலிருந்து தெளிவாகின்றது. 1953 ம் ஆண்டு முதல் 1959 ம் ஆண்டு வரையும் இங்கு இரு தெப்பமீன்பிடிகாரர்களே, அதுவும் மீன்பிடியற்ற காலத்தில் மாத்திரம் செயலாற்றிவந்தனர். 1960 ம் ஆண்டு ஆறு தெப்பங்கள் மாத்திரம் செயலாற்றின. 1961 ம் ஆண்டில் மாத்திரமே தெப்பமீன்பிடியாளர்கள், மீன்பிடிக் காலத்தில் மீன்பிடிக்கத்தொடங்கினர்.

இலங்கையின் முழு மீன் உற்பத்தியின் மூன்றில் இரண்டு பங்கு கரை வலையால் வருகின்றதென்பதாக கரைவலை மீன்பிடிகாரர்களுக்காகக் கூறப்பட்டது. இது சில வேளை, கூட்டிச் சொன்னதாயிருக்கலாம். கடற்றொழில் ஆராய்ச்சி நிலையச் செய்தித் திரட்டு இல. 4, 1952 முதல் 1954 வரையுமுள்ள மூவாண்டுகளுக்குமுள்ள சராசரியை ஆதாரமாகக் கொண்டு 38·6 சத விகிதம் எனும் எண்ணிக்கையைத் தருவதுடன் கரைவலை ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து ஆற்றல் குறைந்த ஒரு மீன்பிடியுபாயமென விபரித்து மீன்பிடிகாரர்கள், கரைவலை மீன்பிடியைக் கைவிட்டு, தெப்பங்களிற் சென்று கைக்கயிற்றால் அல்லது சுருக்குவலைகளால் மீன்பிடிக்கப் போவார்களாயின் இலங்கையின் உணவு விநியோகத்திற்கு இரு மடங்குகளுக்குமேல் உதவுவரென்று குறிப்பாய்க் கூறியிருந்தாலும் கரைவலை, இலங்கையின் மீன் விநியோகத்தின் மிக முக்கியமான தனி வழியென்றும் எமது தேசிய நலனில் ஆர்வம் கொண்ட எல்லோரது கவனத்தையும் கவருகின்றதென்றும் மிகக் கவனமான முற்சிந்தனையின்றி இதில் தலையிடக்கூடாதென்றும் பகருகின்றது.

வழமைச் சட்டத்தின் கீழ் குடியானவன் ஒவ்வொருவனுக்கும் அவன் எங்கு விரும்புகின்றானோ, எப்பொழுது அவன் விரும்புகின்றானோ, எப்படி அவன் விரும்புகின்றானோ அப்படி மீன்பிடிப்பதற்கு சரிநிகரான உரிமையிருக்கின்றதென்பது தெளிவு.

கடற்றொழிற் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 212) இன் கீழ் கடற்றொழிலுக்குப் பொறுப்பாயுள்ள அமைச்சருக்கு அந்த வித உரிமைகளைக் குறைக்க அல்லது நிராகரிக்க அதிகாரமிருக்கின்றதென்பது இதே போன்று தெளிவானதாகும்.

இந்த விசாரணையில் தீர்மானிக்கப்படவேண்டிய ஒரு அம்சம் என்னவெனில் இப்பிராந்தியத்தில் கடற்கரைக்கு அப்பால் தெப்ப மீன்பிடியாளர்கள் செயலாற்றும் உரிமையை குறைக்க அல்லது நிராகரிக்க அமைச்சர் தன் அதிகாரத்தைப் பாவிக்கக்கூடியஇடமாவென்பதே.

இந்த விடயத்தை இரு படிகளிற் கவனித்தல் வசதியானதாகத் தெரிகின்றது. முதலாவது, மீன்பிடியில்லாத காலத்தில் செயலாற்றுதல் இரண்டாவது, மீன்பிடிக் காலத்தில் அதாவது, அக்டோபர் மாதம் முதல் மார்ச்சு மாதம் வரை செயலாற்றுதல் சம்பந்தமானதாகும்.

**மீன்பிடியற்றகாலச் செயலாற்றல்கள்.**—தெப்பமீன்பிடிக்கு ஆட்சேபனை என்னவெனில் சினையீனுவதற்க கக் கரைக்கு வருகின்ற மீன்களைக் கலைத்து விடுகின்றதென்பதாகும் ; மீன்களுக்கு நல்ல உணவைத் தருகின்ற சேறான கடலடியை மீன்கள் விரும்புகின்றன. தெப்பங்களினூற் பாவிக்கப்படுகின்ற வழிவலைகளில் இணைக்கப்பட்டுள்ள பாரங்கள் கடலடியோடு பட்டாற்போல் இழுபடுவது, மீன்களைக் கலைத்துப் பயப்படுத்திச் சினையீனுவதைத் தலைகீழாக்கி விடுகின்றது. இது, மீன்பிடிக்காலத்தில் மீன்பிடித்தலை எதிரிடையாய்ப் பாதிக்கின்றது.

மேற்குக் கரையில் மீன்கள் சினையீனும் பழக்கத்தினையிட்ட உறுதிப்பாடான கூற்றுகளைதையும் கண்டெடுத்துக்கொள்ள முடியாதவனாயிருந்தாலும் மீன்கள் தென்மேற் பருவப் பெயர்ச்சிக் காற்றுக் காலத்தில் திறந்த கடற்கரையை அடுத்துள்ள கொந்தளிப்புள்ள நீரகத்தைச் சினையீனுவதற்காகத் தெரிந்தெடுக்காதென்பது மிகச் சாத்தியமானதென எனக்குத் தெரிபடுகின்றது. வழிவலைகளின் பாரங்கள் மீன்களைப் பயமுறுத்துகின்றதெனும் விடயத்தைப் பொறுத்தவரையில் கடற்றொழில் அதிபரவர்கள், தான், கைத்தொழில் கடற்றொழில் அமைச்சுவின் நிரந்தரச் செயலாளருக்கு எழுதிய 1957 ம் ஆண்டு ஜூன் மாதம் 26 ம் திகதியிட்ட கடிதத்தில் இக்கோட்பாடு பிழையானதென திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ளார்.

கரைவலை மீன்பிடி இப்பிராந்தியத்தில் முக்கியமாக, புலம்பெயர்ந்து வருவோராலேயே செய்யப்பட்டு வரப்படுகின்றது.

சாட்சியமளித்த ஒரு கரைவலைச் சொந்தக்காரன் ஒரு கரைவலையில் வேலை செய்வதற்கு 60 முதல் 65 பேர் ஆட்கள் தேவையென்று கூறினார். தனக்கு வேலை செய்யும் எல்லோரும் தன்னுடைய பகுதியினர், அதாவது, நீர்கொழும்பு மாவட்டத்தவர்கள். உள்ளூரவர்கள் மூவர் மாத்திரம் அவருடைய வலையில் வேலை செய்தனர். இவர்களில் ஒருவர் மீன்பிடியில்லாத காலத்தில் பாதுகாவலனாக அமர்த்தப்பட்டவரும் மற்றைய இருவரும் வயல் செய்கைக்காரர்களாக வேலை செய்கின்றவர்களுமாவர். பாடுகள் 1 முதல் 23 வரையுமுள்ள பிராந்தியத்தில் கரையையடுத்து வாழும் மக்கள் (நீர்கொழும்பு மாவட்டத்தில்) துவா, பிட்டிப்பனையிலிருந்து வந்தோரின் வழித்தோன்றல்களென்றும் அவர் கூறினார். ஆதலின், உள்ளூர் வாசிகள் நீள்காலத் தொடர்ச்சியுடைய மீன்பிடிகாரர்களின் வழித்தோன்றல்களும் கடல் அன்னவர்களின் இரத்தத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றதெனக் கூறும்படியாயுள்ளவர்களும் என்பது தெளிவாகும்.

ஒன்று முதல் 23 வரையுமுள்ள பாடுகளைப் பார்வையிடுவதில் யான் ஒரு சில மணித்தியாலங்களைக் கழித்து, சில தெப்பமீன்பிடியாளர்களுடன் உரையாடினேன். அவர்கள் சார்பில் பேசியவர் வெளிப்படையான திருப்தியுணர்ச்சியோடு அன்னவர்களின் பொருளாதார நிலையின் அபிவிருத்தியையிட்டுப் பேசிய பொழுது அவர் எனது உள்ளத்தில் படியுமாறு பேசினார். வெளிப்படையாக இவர்கள் உதவியைப் பெற அருகதையுடையவர்களும் உதவி கொடுக்கப்படவேண்டியவர்களுமாவர். இவர்களால், மீன்பிடியில்லாத காலத்தில் தெப்பங்களைச் செயலாற்றுதல் அவ்விடத்திலில்லாத கரைவலைத் தொழிலாளர்களை எந்த விதத்திலும் எதிரிடையாய்ப் பாதிக்குமென்பதை யான் காண முடியாதவனாயிருக்கின்றேன்.

**மீன்பிடிக் காலத்தில் செயலாற்றுதல்.**—இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் சிலாபத்தில் கரைவலை மீன்பிடி நடைபெற்றதென்றும் ஆனால் தெப்பமீன்பிடியாளர்கள் கரைவலை மீன்பிடியைப் பாழாக்கினார்களென்றும் அதன் பயனாக, கரைவலைக்காரர்கள் சிலாபத்தைக் கைவிடவேண்டியதாயிற்றென்றும் சாட்சியமிருந்தது. சின்னப்பாடு கரைவலை மீன்பிடிக்கு மிக உசிதமான இடமேனெனில், வலைகள் சிக்கிக்கொள்ளக் கூடிய பாறைகள் இல்லாத படிப்படியாய் சரிந்து செல்லும் மேடைக் கடலடியாயிருத்தலாலேயாகும். ஆதலின், இந்த இடம் தெப்ப மீன்பிடியாளர்களிடமிருந்தும் பாதுகாப்பக்கப்பட வேண்டுமெனக் கூறப்பட்டது.

சின்னப்பாட்டுக்குத் தெற்கிலுள்ள உடப்பிலும் சின்னப்பாட்டுக்கு வடக்கேயுள்ள பிராந்தியத்திலும் கரைவலை மீன்பிடியும் தெப்ப மீன்பிடியும் தோளோடு தோள்போன்று நடைபெறுகின்றன.

சின்னப்பாடுவைப் போலல்லாது, கரைவலை மீன்பிடிக்கு தகுதியற்ற சில குறிப்பிட்ட இடங்களை வழங்கிக் கொண்டிருக்கும் வெளியரும்பு பாறைக் கற்கள் கரைக்கப்பாலிருக்கின்றமையால் தெப்பங்கள் ஆங்கு மீன்பிடிக்கலாமென இப்பிராந்தியங்களில் இது சாத்தியமென விளக்கப்பட்டது.

காண்பிக்கப்பட்ட கடற்படைக் கோட்டுப் படத்தை ஒரு முறை பார்த்ததும் இக்கடற்கரைகளின் பௌதீக விபரணம் சரியென்பதை உறுதிப்படுத்துகின்றது. ஆனால், இந்தக் கோட்டுப்படம் சிலாபக் கடற்கரையையடுத்து போதிய அளவான கற்பாறைகள் உண்டாகியிருப்பதையும் காட்டுகின்றது. கரைவலை மீன்பிடி நிலையமொன்றல்லாது சிலாபத்தைப் கைவிடுவதற்கு இவைகள் ஆகக்குறைந்த காரணமாயிருக்கலாமென்பது சாத்தியமாகும்.

முதலியார் ஜெராமிஸ் பெர்னாந்து அவர்களின் கீழ் வேலையிலமர்ந்துள்ள ஒரு கணக்கு எழுது வினைஞர் (கணக்கப்பிள்ளை) ஆன திரு. எஸ். எச். டேவிட் சில்வா, 1960/61 இலும் 1961/62 இலும் மீன்பிடிக் காலங்களில் சின்னப்பாட்டுப் பிராந்தியத்தில் சில கரைவலைப் பாடுகளில் பிடித்த மீன்களையிட்டு சாட்சியமளித்தார். பி. 19 என்றும் பி 19 ஏ என்றும் அடையாளப்படுத்திய விபரக் கூற்றொன்றைக் காண்பித்தார். இவைகளை எடுத்துத் தொகுக்கப்பட்ட புத்தகங்களை யான் பரிசோதித்துப் பார்த்து அவைகள் நல்ல முறையில் எழுதப்பட்டு வந்திருக்கின்றனவெனத் திருப்திப்பட்டுள்ளேன். இந்தப் பாடுகளில் 1960/61 ம் ஆண்டுகளில் 451,200 இறுத்தல்களிலிருந்து 1961/62 ம் ஆண்டுகளில் 398,418 இறுத்தல்களாக வீழ்ந்துள்ளதை இது காட்டுகின்றது.

இது இந்த வருடத்தில் தெப்பங்களின் தலையீட்டாலேற்பட்டதெனக் காரணம் கூறப்பட்டது. இந்த வீழ்ச்சி சுமார் 53,000 இருத்தலும் கிட்டத்தட்ட 12 சத விகிதமானதுமாகும். ஏற்கனவே மேற்குறிப்பிட்ட செய்தித்திரட்டு இல. 4 கிட்டத்தட்ட பெரும் மீன்பிடிகள் எல்லாவற்றிலும் பிடிக்கும் மீனில் 20 சத விகித மாற்றம் சாதாரணமானதெனக் குறிப்பிடுகின்றது.

1959 ம் ஆண்டுக்காய கடற்றொழில் அதிபரவர்களது பரிபாலன அறிக்கையில் பக்கம் எல் 80 இல் அட்டவணை II, சின்னப்பாடுவின் உடன் மீன் உற்பத்தி (அறிக்கையில் முந்தல் எனக்காட்டப்பட்டுள்ளது) யின் அளவு 86,335 அந்தர் என்றும், பக்கம் எல் 82 இல் அட்டவணை IV, அதே பிராந்தியத்தின் பதப்படுத்திய மீன்உற்பத்தியின் உலர்ந்த நிறை 29,514 அந்தர் எனவும் காட்டுகின்றன். இந்தத் தொகைகள் முறையே 70,983 அந்தர், 25,788 அந்தர் என அட்டவணை III இலும் V இலும் காட்டப்பட்டுள்ளவாறு மீன்பிடியற்ற காலத்தில் பிடித்துக் கரையேற்றிய மீன்கள் சம்பந்தமாகத் திருத்தப்படவேண்டும். அப்படியிருந்தாலும் உடன் மீனைப் பொறுத்த வரையில் சின்னப்பாடு யாழ்ப்பாணத்திற்கு மாத்திரமே இரண்டாவதாகவும் இலகுவாக இலங்கையில் பதப்படுத்திய மீனை ஆகக்கூடியதாய் உற்பத்தி செய்யுமிடமாயும் காட்டுகின்றது. இதிற் பெரும்பாகம், உண்மையாகக் கரைவலையிலிருந்தே வருகின்றது.

கரைவலை போடுகின்ற அதே நேரத்தில் தெப்பமீன்பிடித்தலை அனுமதித்தல் விரும்பத்தகாததெனக் கருதினால், இரவாயிருக்கும் வேளையிலேயே கடலுக்குப் போகின்ற தெப்பங்கள், அவைகள் எல்லாம், சொல்லப்போனால் மு. ப. 7 மணிக்கு அதாவது, கரைவலை போடப்படுவதற்கு முன்னர், கரைக்குத் திரும்புமாறு செயலாற்றுவதற்காகுதல் ஆட்சேபனையேதும் இருக்கக் கூடாதென்பதாக யோசனை கூறப்பட்டது. இது, இப்பிரச்சனையைத் தீர்க்கும் மார்க்கமல்ல என இதற்கு மாறாகக் கூறப்பட்டது. தெப்ப வலைகள், இராக் காலத்தில் கடலிற் போட்டு வைக்கப்பட்டிருக்கும் வேளையில் பொசுபரசு எனப்படும் நின்ற வொளிவீச்சலைக் கடலிலுண்டுபண்ணுவதால், இது மீன்கூட்டத்தைப் பயமுறுத்தியும் குளிரான பறவையான நீரகத்தில் உணவுதேடி வைகறையில் வருகின்ற மீன்கூட்டம் அவைகள் வரும் வழியில் தெப்பங்களால் போட்டு வைக்கப்பட்டிருக்கும் ஒரு அணி வழிச்சல் வலைகளைக் கடந்து வரவேண்டியிருப்பதனால் இது அவைகளை அச்சப்படுத்தாதுதான் விட்டாலும் அவை வருகின்ற பாதையை வேறு புறமாகத் திருப்பியாகுதல் விடும். நின்ற வொழி வீச்சு ஆழியில் ஒரு இயற்கையான தோற்றப்பாடானமையால், சில வேளைகளில் மீன்கூட்டங்களாலேயே சடுதியாகத் தட்டிவிடுவதுபோல் ஏற்படுத்தப்படுவதனால் இந்த வாய்மூலத்தையிட்டு யான் முற்றும் திருப்தியடையவில்லை. எல்லாம் இப்படியிருந்தாலும், இது ஒரு அம்சமாயிருக்க முடியாது என்பது திட்டமான ஒன்றல்லாததோடு, ஒரு அணி வழிவலைகள், மீன்களின் பாதை முகத்தைத் திருப்பாதுதான் விட்டாலும் கரைவலை மீன்பிடியை எதிரிடையாய்ப் பாதிக்குமாறு வலையை நோக்கிவருகின்ற மீன் கூட்டத்தைத் தாமதிக்கவாகுதல் செய்யுமென எனக்குத் தட்டுப்படுகின்றது.

தெப்ப மீன்பிடியாளர்களுக்கேற்பட்ட விளைவையிட்டு முற்றும் உளம் வருந்திக்கொண்டு அவர்களுக்கு எல்லாவித சாத்தியமான உதவியும் அளிக்கப்படவேண்டுமென சரியான மனத்திருப்தியடைந்தும் இலங்கையின் பொருளாதாரத்திற்கு சின்னப்பாட்டிலுள்ள கரைவலை மீன்பிடி இப்பொழுது எவ்வளவு முக்கியமானதென்றால், அது, இப்போதைக்கு—இந்தவிதமான உயர்தரமாய் வளர்ச்சியடைந்தும் தாபிதம் செய்யப்பட்டதுமான தொழிலுக்கு நிரூபிக்கப்பட்ட பிற தொழிலேதும் இல்லாதிருந்தால்-இதனை எதிரிடையாய்ப் பாதிக்கக்கூடிய எதையும் அனுமதிக்கக் கூடாது என்ற முடிவுக்கு வருவதைவிட வேறு மார்க்கமேதுமில்லாதிருக்கின்றேன். மீன்பிடிக் காலங்களில் இதே கடற்கரையையடுத்து தெப்ப மீன்பிடி செய்தல், அதனை அவ்விதம் பாதிக்காது என்பதும் திட்டவட்டமானதல்ல. எந்த விதமாயிருப்பினும், முதன் முதலாக, மீன்பிடிக் காலத்தில் இப்பிராந்தியத்தில் 1961 ம் ஆண்டில் மாத்திரமே தெப்பங்கள் மீன்பிடித்திருக்கின்றன.

யான் ஆதலின் :

(1) சின்னப்பாடு, கண்டத்தொடுவாவ ஆகிய பிராந்தியங்களில் உண்மையாக வதிவோர், அப்படிப்பட்ட வருடங்களில் ஏப்ரில் மாதம் தொடக்கம் செப்டம்பர் மாதம் வரையும் அதற்கு அணைந்தாயுள்ள நீரகங்களில் மீன்பிடிக்கத் தெப்பங்களைப் பாவிக்க அனுமதிக்கப்பட வேண்டும்.

(2) ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாதம் தொடக்கம் அதனை அடுத்து வருகின்ற மார்ச்சு மாதம் வரையும் இந்த நீரகத்தில் தெப்ப மீன்பிடியேதும் அனுமதிக்கப்படக்கூடாது.

(3) மேலேயுள்ள (1) க்கும் (2) க்கும் அதிகாரமளிக்க ஒழுங்கு விதிகள் வகுக்கப்படவேண்டும்.

(4) இந்தப் பிரச்சனையையிட்டு விஞ்ஞான ரீதியான ஆய்வை அடிப்படையாகக் கொள்ளக்கூடிய போதிய அளவான தொழில் நுட்பம் சார்ந்த தரவுகளைக் கடற்றொழில் அதிபரவர்கள் சேர்த்தெடுத்துக் கொண்ட காலையில் இந்த முழுப் பிரச்சனையும் மீழப்பார்வையிடப்பட வேண்டும், எனச் சிபார்சு செய்கின்றேன்.

இந்தத் தகராற்றோடு சம்பந்தப்பட்ட இரு கட்சியினர்களுக்கும் தெரிபட்ட, வழக்குரைஞர் திரு. கே. சி. டீ. சில்வா அவர்களுக்கும் பெருக்குதோர், ஜனாப். எஸ். எம். அபுதாஹிர் அவர்கட்கும் இந்த விசாரணை முழுவதிலும் அவர்களளித்த உதவிக்கும் விசாரணைக்கு, மிகத் திறமான முறையான ஒழுங்குகளைச் செய்த உதவிக் கடற்றொழில் அதிபர், திரு. வி. எல். சி. பீற்றர்ஸ் அவர்களுக்கும் அன்னவர் பகுதியிலுள்ள உத்தியோகத்தர்களுக்கும், மிக ஆற்றலோடு கடமைபுரிந்தும் எனக்குப் பெரும் உதவியாயும் இருந்த பேச்சு மொழிபெயர்ப்பாளர்களும் சுருக்கெழுத்தாளர்களுமான பணியாளர்களுக்கும் யான் நன்றி கூற வேண்டியவனாயிருக்கின்றேன்.

சிறில் வான்லங்கென்பேக்,
ஆணையாளர்.

19.12.62.

மு. ப. 10.15 : இது என்னால் வாசிக்கப்பட்டது. கட்சியினர்களின் இணக்கப்படி இதன் சாரம் தமிழிலும் சிங்களத்திலும் மொழி பெயர்த்துச் சொல்லப்பட்டது.

சிறில் வான்லங்கென்பேக்,
ஆணையாளர்.

19, டிசம்பர் 1962.

4—729/2

---

## சம்பளச் சபைச் சட்டம்

### அறிவித்தல்

(136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைச் சட்டத்தின் 9 ம் பிரிவின் பிரகாரம், கனம் தொழில், தேசியமய சேவை மந்திரி பின்வரும் நியமனங்களைச் செய்துள்ளாரென்று, 1943 ம் ஆண்டின் சம்பளச் சபை விதிகளின் 26 ம் விதியின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது :—

(1) ரப்பர் வளர்த்தலும் பதப்படுத்தலும், தென்னை வளர்த்தல், தெங்குப்பொருள் உற்பத்தி ஆகிய தொழில்களுக்குரிய சம்பளச் சபைகளில் நியமன அங்கத்தவராகவிருந்த திரு. ஆர். எஸ். புரோஹியர் தாமாக விலகியதால் அவருக்குப் பதிலாக அங்கம் வகிக்க திரு. எஸ். ஏ. விஜயதிலக என்பவர் ;

(2) மோட்டார்ப் போக்கு வரத்துத் தொழிற் சம்பளச் சபையில் நியமன அங்கத்தவராகவிருந்த திரு. ஆர். எல். புரோஹியர் தாமாக விலகியதால் அவருக்குப் பதிலாக அங்கம் வகிக்க திரு. ஜீ. டபிள்யு. எதிரிவீர என்பவர்.

வி. சா. ம. த மெல்,
தொழில், தேசியமய சேவை மந்திரி காரியாலய நிரந்தரக் காரியதரிசி.

கொழும்பு,
1963 ம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 13 ந் திகதி.

4—671.

---

## சம்பளச் சபைச் சட்டம்

### அறிவித்தல்

தென்னை வளர்த்தற் தொழிற் சம்பளச் சபையில் தொழிலாளரின் பிரதிநிதியாக இருந்த திரு. கே. இராஜலிங்கம் காலஞ்சென்றமையால் அவருக்குப் பதிலாக அங்கம் வகிக்க திரு. வீ. கே. வெள்ளையன் என்பவரை, (136 ம் அத்தியாயமாகிய) சம்பளச்சபைச் சட்டத்தின் 9 ம் பிரிவின் பிரகாரம், கனம் தொழில், தேசியமய சேவை மந்திரி மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளாரென, 1943 ம் ஆண்டின் சம்பளச்சபை விதிகளின் 26 ம் விதியின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

வி. சா. ம. த மெல்,
தொழில், தேசியமய சேவை மந்திரி காரியாலய நிரந்தரக் காரியதரிசி.

கொழும்பு,
1963 ம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 13 ந் திகதி.

4—669.

## சம்பளச் சபைச் சட்டம்

### அறிவித்தல்

(136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைச் சட்டத்தின் 9 ம் பிரிவின் பிரகாரம், பாண் தயாரிப்புத் தொழிற் சம்பளச் சபையில் 1963 ம் ஆண்டு மாச்சு மாதம் 11 ந் திகதி தொடக்கம் மூன்று ஆண்டு காலத்திற்கு அங்கம் வகித்தற்கு, பின்வரும் பேர்வழிகளை கனம் தொழில், தேசியமய சேவை மந்திரி மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளார் என்று, 1943 ம் ஆண்டுச் சம்பளத் தீர்ப்புச் சங்க விதிகளின் 26 ம் விதியின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

வி. சா. ம. த மெல்,
தொழில், தேசியமய சேவை மந்திரி காரியாலய நிரந்தரக் காரியதரிசி.

கொழும்பு,
1963 ம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 13 ந் திகதி

நியமன அங்கத்தவர்கள்

திருமதி என். எஸ். சீ. பெரேரா
திரு. எஸ். ஏ. விஜயதிலக
திரு. ஜே. எல். சீ. ரொட்றிகோ

முதலாளிகளின் பிரதிநிதிகள்

திரு. டீ. எஸ். இளையபெருமா
திரு. கே. ஜி. என். செனவிரத்ன
திரு. டபிள்யு. எஸ். எச். சொய்சா
திரு. எம். ஏ. பியத்திஸ்ஸ
திரு. என். டபிள்யு. ஜே. முதலிகே
திரு. என். மகாதேவா
திரு. றிச்சாட் பெரேரா
திரு. ஜே. ஈ. ரீ. கிறிஸ்ரோபர்

தொழிலாளரின் பிரதிநிதிகள்

திரு. திலக குலசேகர
திரு. எஸ். எஸ். திசாநாயக
திரு. கே. குலவீரசிங்கம்
திரு. ஆர். ஜி. நாதன்
திரு. ஜீ. பீ. பெரேரா
திரு. ஆர். எல். திலகரத்ன
திரு. எம். கே. பீ. ராஜபக்ஷ
திரு. எம். ஏ. எஸ். குணரத்ன.

4—670.

***வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.***

***வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.***

***அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.***

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.